# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 13,122—1962 මැයි 17 වැනි බ්‍රහස්පතින්දා—1962.5.17

13,122 ம் இலக்கம்—1962 ம் ஆண்டு மே மாதம் 17 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும்.. | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 290 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாஜுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 289 | "மதுவரிச்சட்ட" அறிவித்தல்கள் .. .. | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

### 1958 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நெற்காணிச் சட்டம்

இத்தாற் பொதுமக்களுக்கு அறிவிப்பதாவது கௌரவ காணி, விவசாய, நீர்ப்பாசன, மின்சார அமைச்சர் கீழ்ச் சொல்லப்பட்டவரை 1958 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நெற்காணிச் சட்டத்தின் பிரிவு 59 (1) இன் ஏற்பாடுகளின் படியும், அதன்கீழ் அமைக்கப்பட்ட பிரமாணங்களின் படியும் ஸ்தாபிக்கப்பட்ட புனராலோசனைச்சபையில் 1.5.62 தொடக்கம் ஒரு வருடகாலத்திற்கு அங்கத்தவராக இருந்து அச்சபைக்கு மேற்படி சட்டத்தின் கீழ் செய்யப்படும் அப்பீல்களை விசாரிக்கவும் தீர்மானிக்கவும் நியமித்துள்ளார்.

திரு. வி. எஸ். குணவர்தன.

டி. ஜீ. எல். மிசோ,
நிரந்தரக் காரியதரிசி.

காணி, விவசாய, நீர்ப்பாசன, மின்சார அமைச்சு,
கொழும்பு 1,
1962 ம் ஆண்டு மே மீ 7 ந் உ.

5—478/1.

---

### 1958 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நெற்காணிச் சட்டம்

இத்தாற் பொதுமக்களுக்கு அறிவிப்பதாவது கௌரவ காணி, விவசாய, நீர்ப்பாசன, மின்சார, அமைச்சர் கீழ்ச்சொல்லப்பட்டவரை 1958 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நெற்காணிச் சட்டத்தின் பிரிவு 59 (1) இன் ஏற்பாடுகளின் படியும், அதன் கீழ் அமைக்கப்பட்ட பிரமாணங்களின் படியும் ஸ்தாபிக்கப்பட்ட புனராலோசனைச் சபையில் 28.4.1962 தொடக்கம் ஒரு வருட காலத்திற்கு அங்கத்தவராக இருந்து அச்சபைக்கு மேற்படி சட்டத்தின் கீழ் செய்யப்படும் அப்பீல்களை விசாரிக்கவும், தீர்மானிக்கவும் நியமித்துள்ளார்.

திரு. யு. எல். எம். அன்வர்.

டி. ஜீ. எல். மிசோ,
நிரந்தரக் காரியதரிசி.

காணி, விவசாய, நீர்ப்பாசன, மின்சார அமைச்சு,
கொழும்பு 1,
1962 ம் ஆண்டு மே மீ 7 ந் உ.

5—478/2

### 1950 ம் ஆண்டின் 25 ம் இலக்க உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டம்

கட்டளை இல. 190

1950 ம் ஆண்டின் 25 ம் இலக்க உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 (1) (vi) ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் ரிக்கிரி பண்டார இலங்கரத்ன, வர்த்தக, வியாபார, உணவு, கப்பற் சேவை அமைச்சர் ஆகிய யான் இக்கட்டளையால் 1962 ம் ஆண்டு மே மாதம் 1 ந் திகதியிலிருந்து பங்கீட்டு முறையின் கீழ் இலங்கையின் எல்லாப் பாகங்களிலுமுள்ள விற்பனையாளருக்கும் வியாபாரிகளுக்கும் "கருவாடு" (எல்லா வகைகளும்) வழங்கும் முறையைக் கையாளவும் பங்கீட்டளவை செய்யவும், அம்முறையில் வேண்டிய ஒழுங்குகளையும் பரிபாலனத்தையும் செய்யவும் உணவுக் கட்டுப்பாட்டதிகாரிக்கு ஆஞ்ஞை யிடுகிறேன்.

ரி. பி. இலங்கரத்ன,
வர்த்தக, வியாபார, உணவு, கப்பற் சேவை அமைச்சர்.

கொழும்பு,
1962 ம் ஆண்டு ஏப்ரில் மீ 30 ந் உ.

5—521/1

---

### விளம்பரம்

1952 ம் ஆண்டின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரமாணங்களின் III ம் பாகத்தின் "இ" தலையங்கத்தின் கீழ் வரும் 4 (6) ம் பிரமாணத்தின் பிரகாரம் 1962 ம் ஆண்டு மே மாதம் 1 ந் திகதி தொடக்கம் இலங்கை முழுவதிலும் பங்கீட்டு முறையின் கீழ் பங்கீட்டுப் புத்தகங்களின் மூலம் "கருவாடு" (எல்லா வகைகளும்) வழங்கப்படுமென்று இத்தால் அறிவிக்கப்படுகிறது.

ரி. பி. இலங்கரத்ன,
உணவுக் கட்டுப்பாட்டதிகாரி.

கொழும்பு,
1962 ம் ஆண்டு ஏப்ரில் மீ 30 ந் உ.

5—521/2

# அரசாங்கப் பகுதிகளின் நாளுவித அறிவித்தல்கள்

## அறிவித்தல்

பேராதனை, இலங்கைச் சர்வகலாசாலையில் பாட வகுப்புகளில் சேர்ந்து தற்பொழுது படிக்கும் அரசினர் பாடசாலை ஆசிரியர்களும் வித்தியாதிபதியின் முகாமையின் கீழுள்ள பாடசாலை ஆசிரியர்களும் 1962 ம் ஆண்டு மே மாதம் 31 ந் திகதியன்று அல்லது அதற்கு முன் வித்தியாதிபதி (என். எஸ். கிளை), வித்தியா பகுதி, மலாய் வீதி, கொழும்பு 2 என்ற விலாசத்தில் கிடைக்கக்கூடியதாக கீழே கேட்கப்படும் விபரங்களைச் சர்வகலாசாலைப் பதிவாளர் மூலம் அனுப்புமாறு கேட்கப்படுகின்றனர்.

2. சர்வகலாசாலைப் புகுமுகப் பரீட்சையில் இவ்வருடம் சித்தியடைந்து இவ்வருடம் அனுமதிக்கப்படுவதற்குத் தகவுடைய சகல ஆசிரியர்களும் கூட 1962 ம் ஆண்டு மே மாதம் 31 ந் திகதியன்று அல்லது அதற்கு முன் வித்தியாதிபதி (என். எஸ். கிளை), வித்தியா பகுதி, மலாய் வீதி, கொழும்பு 2 என்ற விலாசத்தில் கிடைக்கக்கூடியதாக கீழே கேட்கப்படும் விபரங்களைச் சர்வகலாசாலைப் பதிவாளர்மூலம் அனுப்புமாறு கேட்கப்படுகின்றனர்.

3. 1962 ம் ஆண்டு ஜூன் மாதம் 4 ந் திகதிக்கு முன் கிழமை நாட்களில் பி. ப. 3 மணிக்கும் பி. ப. 4.30 மணிக்கும் இடையில் விண்ணப்பதாரிகள் இக்கந்தோருக்கு வந்து தமது விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டனவா எனப் பார்க்கலாம்.

எஸ். எவ். டி சில்வா,
வித்தியாதிபதி.

வித்தியா பகுதி,
மலாய் வீதி, கொழும்பு 2,
1962 ம் ஆண்டு மே மீ 10 ந் வ.

### மாதிரி விண்ணப்பம்

1. முழுப் பெயர் :————.
   ஆசிரியராகப் பதிவு செய்துள்ள இலக்கம் (இருப்பின்) :————.
   பிறந்த திகதி :————.
   சொந்த விலாசம் :————.

2. ஆசிரியராயின், கடைசியாகச் சேவை புரிந்த பாடசாலையும் அதன் விலாசமும் :————.

3. பாடசாலை முகாமை :————.
   (அரசினர் அல்லது வித்தியாதிபதியின் முகாமையின் கீழுள்ளதா? அல்லது உதவி நன்கொடை பெறுவதா ?)

4. தராதரங்கள் :————.

5. சேவைக்காலம் :————.

6. இதற்கு முன்னரும் படிப்பு லீவு பெற்றிருக்கிறீரா ? பெற்றிருப்பின் லீவுக் காலமும் அதன் நோக்கமும் குறிப்பிடப்பட வேண்டும். ஒப்பந்தம் யாதேனும் ஏற்கனவே செய்திருப்பின் ஒப்பந்தக் காலம் :————.
   ............ தொடக்கம் ............வரை.

7. சர்வகலாசாலையில் விண்ணப்பதாரி மேற்கொள்ளவிருக்கும் பாட வகுப்பு (கல்வி டிப்ளோமா வகுப்பா அல்லது பொதுக் கலைப் பட்ட வகுப்பா அல்லது பொது விஞ்ஞானப் பட்ட வகுப்பா) :————.

8. பாடங்கள் :————.

9. பாட வகுப்பின் ஆரம்பத் திகதி :————.

10. பாட வகுப்பின் காலம் :————.

11. லீவு ஏற்கனவே வித்தியாதிபதியால் அளிக்கப்பட்டுள்ளதா ? அப்படியாயின், லீவு அளிக்கப்பட்ட கடிதத்தின் தொடர்பிலக்கம், திகதி ஆகியவற்றைக் குறிப்பிடவும் :————.

————,
திகதி :————. விண்ணப்பதாரியின் கையொப்பம்

5-559.

---

## வற்றுப்பளை கண்ணகி அம்மன் கோவில்

### பொங்கல் உற்சவம்—1962

கண்ணகி அம்மன் கோவில் பொங்கல் உற்சவம் 1962 ம் ஆண்டு வைகாசி மாதம் 21 ந் திகதி காலை 6 மணி தொடக்கம் 22 ந் திகதி காலை 7 மணிவரை நடைபெறும்.

2. 1949 ம் ஆண்டு வைகாசி மாதம் 27 ந் திகதியும், 1950 ம் ஆண்டு வைகாசி மாதம் 26 ந் திகதியும் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க வர்த்தமானியில் (Government Gazette No. 9978 of 25. 49 & 10105 of 26. 5. 50) குறிப்பிட்டுள்ள கட்டளைகள் முறையே இலக்கம் 9978, 10105 ஆகியவைகள் பொதுமக்களின் கவனத்துக்கு கொண்டுவரப்படுகிறது.

மேற்கூறப்பட்ட கட்டளைகள் இவ் உற்சவ காலத்தில் தீவிரமாக அமுல் நடத்தப்படும்.

T. சரவணபவான்,
வவுனியா மாவட்ட அரசாங்க
அதிபருக்காக.

கச்சேரி, வவுனியா,
1962 ம் ஆண்டு மே மீ 12 ந் வ.

5—621

---

## அறிவித்தல்

### இசால உற்சவம் கதிர்காமம்—1962

1948 ம் ஆண்டு சித்திரை மாதம் 30 ம் திகதியையும், 1949 ம் ஆண்டு ஆடி மாதம் 22 ம் திகதியையும், 1958 ம் ஆண்டு மாசி மாதம் 7 ந் திகதியையும், 1961 ம் ஆண்டு ஆடி மாதம் 7 ந் திகதியையும், 1962 ம் ஆண்டு பங்குனி மாதம் 2 ந் திகதியையும் கொண்ட முறையே 9,859, 10,000, 11,225, 12,508, 12,947 ம் இலக்கங்களைக் கொண்ட அரசாங்க வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கதிர்காம், செல்லக்கதிர்காம யாத்திரைகளைப்பற்றிய கட்டுப்பாடுகள் பொதுசனங்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகிறது.

இது சம்பந்தமாக பொதுசனங்களுக்கு அறியத்தருவது யாதெனில் :—

(அ) தற்காலிக கட்டிடங்கள் ஏதேனும் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரின் அனுமதியில்லாமல் கதிர்காம, செல்லக்கதிர்காம பாடி எல்லைக்குள் கட்டக்கூடாது.

(ஆ) கதிர்காமத்திலுள்ள பரிசுத்தமான எல்லைக்குள் பின்வரும் இடங்களில் தற்காலிக வியாபார ஸ்தானங்கள் அமைப்பதற்கு உத்தரவு கொடுக்கப்படமாட்டாது.
   (1) பெரிய வீதி.
   (2) பின் வீதி.
   (3) பின் வீதிக்கும் நாக வீதிக்கும் உட்பட்ட புத்தள ரோட்.
   (4) பெரிய வீதியையும் பின் வீதியையும் தொடுக்கும் ரோட்டு.
   (5) சுப்பிரமணியர் கோவிலுக்கும் தெய்வானை அம்மன்கோவில், வள்ளியம்மன் கோவில்களுக்கு அருகாமையிலுள்ள நிலங்கள்.

(இ) பாடி எல்லைக்குள் சீமந்து பாலத்திற்கு கீழுள்ள இடத்தைத்தவிர மற்ற இடங்களில் ஆற்றிலிருந்து 100 யாருக்கு உட்பட் பாபர் சாப்புகள் வைத்திருப்பது அனுமதிக்கப்படமாட்டாது.

(ஈ) மாடுகள் குளிப்பாட்டும் இடத்திற்குக் கீழ் ஆற்றில் குளிக்கவோ தண்ணீர் அள்ளவோ எவரும் அனுமதிக்கப்பட மாட்டார். நோய் பரவுதலைத் தடுப்பதற்காக, சனங்கள் ஆற்றில் குளிப்பதற்கும், தண்ணீர் குடிப்பதற்கும், மாடுகளைக் குளிப்பாட்டுவதற்கும் பிரத்தியேகமாகக் குறிக்கப்பட்ட இடங்களைப் பாவிக்க வேண்டும்.

(உ) எவ்வித மோட்டார் வண்டிகளாவது, மாட்டு வண்டிகளாவது, துவிச்சக்கர வண்டிகளாவது பாடி எல்லைக்குள் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரின் உத்தரவின்றி கொண்டுவர அனுமதிக்கப்படமாட்டாது.

(ஊ) எவ்விதமான தற்காலிகக் கட்டிடங்களும் செல்லக் கதிர்காம ஆற்றங்கரையிலிருந்து 50 யாருக்குள் அமைப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

(எ) கிரி வெஹெர-செல்லக்கதிர்காம வீதியில், கிரிவெஹெரவிலிருந்து $\frac{1}{4}$ மைல் அப்பால் உள்ள இடம் தொடக்கம், செல்லக்கதிர்காமத்திலிருந்து $\frac{1}{4}$ மைல் முடியும் இடத்தின் உட்பட்ட இடங்களைத் தவிர, எவராயினும் பாடி எல்லைக்குள் பிச்சை கேட்கவோ வேண்டவோ கூடாது.

(ஏ) மேலே " எ " பிரிவில் கூறப்பட்ட இடங்களைத்தவிர, பிச்சைக்காரருக்கு பணமாகவோ அல்லது எந்தவித பிச்சையும் கொடுப்பதோ, விநியோகிப்பதோ கூடாது.

எவராயினும் மேற்கூறிய கட்டுப்பாடுகளை மீறி நடந்தால் அவர்களுக்கெதிராக வழக்குத் தொடரப்படும்.

டபிள்யூ. ஏ. டி. எஸ். டி. சப்பரமாது,
பதில் அரசாங்க அதிபர்,
பொலனறுவை மாவட்டம்.

கச்சேரி,
பொலனறுவை,
1962 ம் ஆண்டு வைகாசி மீ 9 ந் வ.

5-607/1.

## அறிவித்தல்

### இசால உற்சவம் கதிர்காமம்—1962

மொனருகல மாவட்ட பதில் அரசாங்க அதிபர் விக்ரமசிங்க ஆராச்சிகே டொன் சனத்குமார தேவப்பிரிய சப்பரமாது ஆகிய நான், 1948 ம் ஆண்டு சித்திரை மாதம் 9,859 ம் இலக்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், கடைசியாகத் திருத்தப்பட்டு 12,947 ம் இலக்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் 1962 ம் ஆண்டு பங்குனி மாதம் 2 ந் திகதி பிரசுரிக்கப்பட்டதுமான கதிர்காமம், செல்லக்கதிர்காமம் யாத்திரிகைகளுக்கென விதிக்கப்பட்ட பிரமாணங் களின்படி, பின்வரும் இடங்களை அப்பிரமாணங்களுக்கமைய எல்லாவித பண்டங்களும் விற்கப்படும் இடங்களாக நியமிக்கிறேன்.

(1) பெரிய வீதி, புற வீதி அவ்வீதிகளை இருமுடிவுகளிலும் இணைக்கும் வீதிகளில் உள்ள நிரந்தரமான கட்டிடங்கள்.

(2) நாகாவீதியில் உள்ள கட்டிடங்கள்.

(3) புத்தளவீதியில் நாகாவீதியைச் சந்திக்குமிடத்திற்கு வடக்கேயுள்ள கட்டிடங்கள்.

(4) கட்டகமுவ வீதியில் திஸ்ஸ-கதிர்காமம் பொது வேலைத்துறை வீதியைச் சந்திக்குமிடத்திற்கு தெற்கேயுள்ள கட்டிடங்கள்.

(5) திஸ்ஸ-கதிர்காமம் பொது வேலைத்துறை வீதியில் கட்டகமுவ வீதி சந்திக்கு வடக்கேயுள்ள கட்டிடங்கள்.

(6) செல்லக்கதிர்காமத்திலுள்ள நிரந்தரக் கட்டிடங்கள்.

(7) செல்லக்கதிர்காமத்தில் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரின் அனுமதியுடன் கட்டப்பட்ட தற்காலிகக் கட்டிடங்கள்.

(8) கிரிவெஹெர மழுவையிலிருந்து கிரிவெஹெர வீதி முகமாயிருக்கும் சுற்றுப்பயண வங்களாவரையில் உள்ள அடைக்கப்பட்ட ஸ்தான ங்கள்.

இந்த அறிவித்தலின் பிரகாரம் வீதியின் மத்தியிலிருந்து 50 அடிக்குக் குறைந்த முன்வாசலமைந்த எந்தக்கட்டிடமும் அவ்வீதியிலுள்ள கட்டிட மெனக் கருதப்படும்.

மேற்படி இடங்களில் தவிர, பாடி எல்லைக்குள் வேறு எவ்விடத்திலும் வியாபாரம் அனுமதிக்கப்படமாட்டாது.

டபிள்யூ. ஏ. டி. எஸ். டி. சப்பரமாது,
பதில் அரசாங்க அதிபர்,
மொனருகல மாவட்டம்.

கச்சேரி,
மொனருகல,
1962 ம் ஆண்டு வைகாசி மீ 9 ந வ.
5-607/2.

---

## அறிவித்தல்

### இசால உற்சவம் கதிர்காமம்—1962

மொனருகல மாவட்ட பதில் அரசாங்க அதிபர், விக்ரமசிங்க ஆராச்சிகே டொன் சனத்குமார தேவப்பிரிய சப்பரமாது ஆகிய நான், 1948 ம் ஆண்டு சித்திரை மாதம் 30 ந் திகதி 9,859 ம் இலக்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் 1948 ம் ஆண்டு சித்திரை மாதம் 16 ம் திகதி இடப்பட்டு பிரசுரிக்கப்பட்டதும், கடைசியாக 12,947 ம் இலக்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் திருத்தப்பட்டு பிரசுரிக்கப்பட்ட கதிர்காமம் செல்லக்கதிர்காமம் யாத்திரிகைகளுக்கென விதிக்கப்பட்ட பிரமாணங்களின் 10 (1) உபவிதிப் பிரகாரம் பின்வரும் இடங்களை யாத்திரிகர்களுக்கு உணவு விநியோகிக்கவும் விற்கவும் நியமிக்கிறேன்.

(1) பெரிய வீதியிலும், புறவீதியிலுமுள்ள உத்தரவுபெற்ற நிரந்தரக் கட்டிடங்கள்.

(2) உத்தரவுபெற்ற நிரந்தரக் கட்டிடங்களும், எம் அங்கோரத்துடன் பின்வரும் வீதிகளில் முன்வாசலுள்ளவையுமான தற்காலிகக் கட்டிடங்கள் :—

(அ) நாக வீதி.

(ஆ) கட்டகமுவ வீதியில் திஸ்ஸ-கதிர்காம வீதி சந்திக்குமிடத்திற்கு தெற்கே.

(இ) திஸ்ஸ-கதிர்காம பொது வேலைத்துறை வீதியில் கட்டகமுவ வீதி சந்திக்குமிடத்திற்கு வடக்கே.

(3) எம் உத்தரவிற்கமைய தெய்வானை அம்மன் கோவில் நிலங்களுள் அமைத்த நிரந்தரக் கட்டிடங்கள் மட்டும்.

(4) எம் உத்தரவுபெற்று செல்லக்கதிர்காமத்தில் அமைக்கப்பட்ட அனுமதி பெற்ற நிரந்தர தற்காலிக கட்டிடங்கள்.

(5) நாகா வீதியோடு புத்தள வீதி சந்திக்குமிடத்திற்கு வடக்குப் பாகமாகவுள்ள நிரந்தர தற்காலிக கட்டிடங்கள்.

(6) நிரந்தரக் கட்டிடங்களும் கிரிவெஹெர மழுவையிலிருந்து கிரி வெஹெர வீதி முகமாகவிருக்கும் சுற்றுப்பயண வங்களா வரையில் உள்ள கம்பியினால் அடைக்கப்பட்ட ஸ்தானங்கள்.

இந்த அறிவித்தலின் பிரகாரம் வீதியின் மத்தியிலிருந்து 50 அடிக்கு குறைந்த முன் வாசலமைந்த எந்தக் கட்டிடமும் அவ்வீதியிலுள்ள கட்டிடமெனக் கருதப்படும்.

கதிர்காமத்திலோ அல்லது செல்லக்கதிர்காமத்திலோ பாடி எல்லைக் குள் வேறு எவ்விடத்திலும் உணவோ அல்லது பானமோ விற்பனோ அல்லது விநியோகம் செய்தலோ கூடாது.

இச்சட்டங்களை மீறும் எவர்மீதும் வழக்குத் தொடரப்படும்.

டபிள்யூ. ஏ. டி. எஸ். டி. சப்பரமாது,
பதில் அரசாங்க அதிபர்,
மொனருகல மாவட்டம்.

கச்சேரி,
மொனருகல,
1962 ம் ஆண்டு வைகாசி மீ 9 ந வ.
5-607/3.

---

## அறிவித்தல்

### கதிர்காம இசால உற்சவம்—1962

இத்தாற் சகலரும் அறியவேண்டியது யாதெனில், கதிர்காம இசால உற்சவம் 1962 ம் ஆண்டு ஆடி மாதம் 2 ந் திகதி தொடங்கி ஆடி மாதம் 19 ந் திகதி முடிவடையும்.

எஸ். டீ. சப்பரமாது,
அரசாங்க அதிபர்,
மொனருகல மாவட்டம்.

கச்சேரி,
மொனருகல,
1962 ம் ஆண்டு வைகாசி மீ 9 ந வ.
5—607/4.

---

**வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.**

**வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.**

**அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள்யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.**

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.